போட்டு குடும்பக் கட்டுப்பாடுத் திட்டத்தை வலியுறுத்தி வருகிறார்கள். அந்த முறையில் அதைப் பற்றி வலியுறுத்துவதற்கான ஏற்பாட்டையும் செய்வார்களா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : குடும்பக் கட்டுப்பாடுத் திட்டத்தைப் பற்றிய மாறான செய்திகள் பத்திரிகைகளில் வரும் போது மறுக்க வேண்டுமென்றுதான் நானும் எண்ணுகிறேன். ஆனால், பதில் அளித்தால் அவர்கள் திரும்ப பதில் அளித்து இப்படி போய்க்கொண்டே இருக்கும். ஆகவே, எங்கெங்கு பிரசாரம் செய்யப்படுகிறதோ அங்கெல்லாம் பத்திரிகைகளில் வந்த செய்திகள் உண்மைக்கு மாறானவை என்பதும் விளக்கிச் சொல்லப் படுகிறது.

முடநீக்கியல் நிலையங்கள்

*567 **கேள்வி.—திரு. எம். எஸ். செல்வராஜன் :**
திரு. வை. சங்கரன் : } கனம்

சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நமது ராஜ்யத்தில் எங்கெல்லாம் ஆர்தோபீடிக் சென்டர்கள் இயங்கி வருகின்றன ?

(இ) அவைகளுக்கு சர்க்கார் கொடுத்து வரும் உதவியின் விபரம் என்ன ?

(உ) சென்னை நகரிலுள்ள ஆந்திர மகிள சபாவின் மேற் பார்வையிலுள்ள ஆர்தோபீடிக் சென்டருக்கு சர்க்கார் ஏதேனும் மானியம் வழங்கியுள்ளதா ?

(எ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

(ஐ) அங்கு சிகிச்சைக்குச் செலவிடப்படும் மருந்துச் செல்வை முற்றிலும் சர்க்கார் ஏற்றுக்கொள்ளும் உத்தேச முண்டா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : (அ) முதல் (ஐ) வரை— சபை முன் விவர அறிக்கை [a] ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

திரு. எம். எஸ். செல்வராஜன் : அரசாங்கம் கொடுத்திருக்கக் கூடிய குறிப்பிலிருந்து சென்னை, மதுரை, தஞ்சை ஆகிய மாவட்டங்களில் மட்டுந்தான் ஆர்தோபீடிக் சென்டர்கள் இருப் பதாகத் தெரிகிறது. எல்லா மாவட்டங்களிலும் இந்த சென்டர்களை அமைக்க ஏற்பாடு செய்வார்களா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : எல்லா ஜில்லா மருத்துவ மனைகளிலும் ஆர்தோபீடிக் சென்டர்களை அமைக்க வேண்டு மென்றால் தகுந்த கட்டடம் வேண்டும், எக்விப்மென்ட்ஸ் வேண்டும். இவைகளை எல்லாம் வாங்க வேண்டுமென்றால் அதிகப் படியாகச் செலவு ஏற்படும் என்ற காரணத்தால் தற்போது இந்த மூன்று இடங்களில் மட்டும் நடத்தப்படுகிறது. மற்ற ஜில்லாக்

---

[a] 928–929-ம் பக்கங்களில் பதினொன்றும் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

9th November 1966]

களிலும் இந்த சென்டர்களை அமைக்க வேண்டுமென்பது அரசாங்கத்தின் பரிசிலனையில் இருக்கிறது.

திரு. சா. கணேசன் : சித்த முறை அல்லது சுதேசி முறை என்ற வைத்தியத்தையும் இணைத்து அல்லது தனியாக இந்தத் துறையிலே பணி செய்வதற்கு வழிவகை செய்யப்பட்டிருக்கிறதா? இல்லாவிட்டால் செய்வதற்கு அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : சித்த வைத்திய முறைகள், சுதேசி முறைகளில் வைத்தியம் செய்யக்கூடியவர்கள் இந்தியன் மெடிகல் ரிஜிஸ்ட்ரேஷன் என்ற அடிப்படையின்கீழ் வருவார்கள். தனிப்பட்ட முறையில்தான் அவர்கள் வைத்தியம் செய்ய வேண்டும். இதோடு இணைக்க முடியாது.

திரு. எம். எஸ். செல்வராஜன் : சிகிச்சை செய்யப்பட்டு குணமடைகிறவர்களில், குறிப்பாக ஏழை மக்களாக இருப்பவர்கள் பூட்ஸ் போன்றவற்றை வாங்க முடியாத நிலையில் அவர்கள் குணம் பெற்றும் பலனை இழக்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள். ஆகவே, அப்படிப்பட்ட ஏழைகள் சர்க்கார் நிறுவனங்களிலேயிருந்து வெளியே போகிறபோது நிரந்தரமாக அவர்கள் உபயோகப்படுத்தக்கூடிய முறையில் இலவசமாக பூட்ஸ் முதலியவற்றை வாங்கிக் கொடுக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : ஏழைகள், பணம் கொடுத்து வாங்க இயலாத நிலையில் இருப்பவர்கள் அரசாங்கத்திற்கு மனுப் போட்டால் இவை எல்லாம் இலவசமாகவே கொடுக்கப்படுகிறது. அப்படி யாருக்காவது கிடைக்கவில்லையென்றால் அங்கத்தினர் அவர்கள் எழுதி அனுப்பலாம்.

திரு. எம். எஸ். செல்வராஜன் : ஆந்திர மகிள சபையிலிருந்து இந்த ஆண்டு சிகிச்சைக்குரிய பூரணச் செலவையும் ஏற்க வேண்டுமென்று கேட்டு அரசாங்கத்திற்கு மனு ஒன்றும் வரவில்லை என்று சொன்னார்கள். 1964-65-ல் பாதி அளவு மானியம் கொடுக்கப்பட்ட தகவல் இருக்கிறது. அதைக் கொள்கையாக ஏற்றுக்கொண்டு வருஷா வருஷம் பாதித் தொகையைக் கொடுக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : அவர்களிடமிருந்து என்ன கோரிக்கை வருகிறதோ அந்தக் கோரிக்கையின் அடிப்படையில் டெபிசிட் மெயின்டனன்ஸ் சார்ஜஸ் கொடுக்கப்படுகிறது.

Medical Colleges

* 568 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether the State Government have received any communication from the Central Government for increasing the